பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 26 திங்கட்கிழமை (10-08-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 256

## ராணுவத் தீர்வு காணமுடியாது என்பதை இனிமேலாவது அரசு உணர வேண்டும்

### லோறன்ஸ் திலகர் பேட்டி

இராணுவ நடவடிக்கை மூலம் இனப் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று தான் நினைப்பது சரியல்ல என்பதை அரசு இப்போதாவது புரிந்து கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுகளை அரசு நடத்த வேண்டும்.

— விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகர் தொலைபேசி மூலம் ஏ. எவ். பி. செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தொடர்கின்ற இராணுவ நடவடிக்கையினால் தமிழ் மற்றும் சிங்கள மக்களின் துன்பங்கள் அதிகரிக்கும் என்றும் திலகர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை கண்ணி வெடித்தாக்குதலை புலிகளே நடத்தினர் என்றும் அவர் தெரிவித்தார். [உ-எ]

### லெப்டினன்ட் ஜெனரலாக கொப்பேகடுவ பதவி உயர்வு

கொழும்பு, ஆக. 10

உயிரிழந்த வடபிராந்திய இராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ லெப்டினன்ட் ஜெனரலாகவும்—

உயிரிழந்த யாழ். மாவட்ட இராணுவத் தளபதி விஜய விமலரத்னா மேஜர் ஜெனரலாகவும் மரணத்துக்கு பின்னராக பதவி உயர்த்தப்பட்ட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணம் மீதான

# பெரும்தாக்குதலை நாளை தொடங்க 'கொப்பே' குழு திட்டமிட்டிருந்தது!

## புலிகளின் சமயோசித தாக்குதலால் அது தாமதமாகும் சாத்தியம்

கொழும்பு, ஆகஸ்ட் 10

யாழ்ப்பாணம் மீதான பெரும் தாக்குதலை நாளை [செவ்வாய்க்கிழமை] தொடங்க ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடபிராந்தியத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ தலைமையிலான உயர்நிலை அதிகாரிகள் குழு திட்டமிட்டிருந்ததாக இப்போது தெரியவருகிறது.

ஆனால் விடுதலைப் புலிகள் சமயோசிதமாக நேற்று முன்தினம் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் கொப்பே குழு பலியானதை அடுத்து யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் தாமதமாகும் சாத்தியம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும் தாக்குதல் நாளை தொடங்குவதாக இருந்தது.

இதற்காகவே மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ தலைமையில் படை அதிகாரிகளின் முக்கிய மாநாடு காரைநகரில் நடைபெற்றது என்றும் —

கண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்ற வேலணை அராலிப் பகுதிக்கு நேரில் சென்று

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படை அதிகாரிகள் உயிரிழந்தது நாட்டை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது

### கேகாலையில் பிரேமா பேச்சு

கொழும்பு, ஆக. 10

ஊர்காவற்றுறையில் கண்ணிவெடித் தாக்குதலில் படை உயரதிகாரிகள் பலர் உயிரிழந்த சம்பவம் நாட்டைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

— இவ்வாறு கூறினார் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா.

கேகாலை நகர மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற — கேகாலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் — உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஊர்காவற்றுறையில் மீண்டும் சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் இப்படை அதிகாரிகள் பலியானார்கள் என்றார் அவர்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய யுத்தத்தினால் பலர் உயிரிழந்துள்ளனர். இந்த யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்பு ஒரு தரப்பை மட்டும் சார்ந்ததாக

[6 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கட்டிச்சோலைப் படுகொலை:

## அதிகாரியும் 17 படையினரும் இன்று ராணுவ நீதிமன்றில்!

லண்டன், ஆக. 10

கடந்த ஆண்டு ஜூன் மாதம் கொக்கட்டிச்சோலையில் அறுபதுக்கும் அதிகமான அப்பாவித் தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து ஸ்ரீலங்கா இராணுவ நீதிமன்றத்தில் நாளை விசாரணை ஆரம்பமாகவிருக்கிறது.

ஓர் இராணுவ அதிகாரி உட்பட 18 இராணுவத்தினர் இராணுவ நீதிமன்றத்தின் முன்னால் இன்று நிறுத்தப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து முன்னர் விசாரணை நடத்திய ஆணைக்குழு வழங்கிய அறிக்கையை அடுத்தே இவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 21 தமிழர் நேற்றுப் படுகொலை!

புதுடில்லி, ஆக. 10

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் தமிழ்க் கிராம வாசிகள் 21 பேர் படுகொலையுண்டனர். மேலும் பத்துத் தமிழர்கள் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து மேல் விவரங்கள் கிடைக்கவில்லை என்று ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது. [உ-எ]

## ராணுவத்தின் மனத்திடத்தை தாமதம் சீர்குலைக்கும்!

கொழும்பு, ஆக. 10

படைத் தளபதிகளின் உயிரிழப்பை அடுத்து, புலிகள் மீதான அடுத்த கட்டத் தாக்குதலை ஆரம்பிப்பதில் ஏற்படும் தாமதம் இராணுவத்தினரின் மனத்திடத்தை சீர்குலைப்பதாகவே இருக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய இராணுவ அதிகாரிகள் சகிதம் உடனடியாக யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதலை நடத்துவது கடினம் என்றும்—

புதிய அதிகாரிகள் இனிமேல்தான் வடபகுதியின் நிலைமையை நேரில் கண்டு அறிந்து கொள்ளவேண்டியிருக்கும் என்றும்— விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். [உ-எ]

## புலிகளுக்குப் பெருவெற்றி!

கொழும்பு. ஆக. 10

ஸ்ரீலங்காப் படையின் உயரதிகாரிகள் கூண்டோடு பலியான சம்பவம் விடுதலைப் புலிகளுக்கு பெருவெற்றி என்று பிரபல அரசியல் விமர்சகர் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் இதற்கு முன்னர் இவ்வளவு பெரிய தாக்குதலை நடத்தியதே இல்லை என்று ஏ. பி. செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த செய்தியாளர் டெக்ஸ்டர் குரூஸ் குறிப்பிட்டார்.

இராணுவ உயர் அதிகாரிகளின் இழப்பு இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்துள்ளது ஊர்ஜிதமாகியுள்ளது என்றும் கூறப்படுகிறது.

## கொப்பே, விமலரத்னவின் இடங்களுக்குப் புதியவர்கள்

கொழும்பு, ஆக. 10

கண்ணி வெடிக்குப் பலியான —ஸ்ரீலங்காப் படைகளின்— வடபிராந்தியத் தளபதி கொப்பேகடுவ, யாழ். மாவட்டத் தளபதி விஜய விமலரத்ன ஆகியோரின் இடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

முறையே கொழும்பில் இருந்தும் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் பிரிகேடியர்கள் ரொஹான் தலுவத்தை மற்றும் அசோகா ஜெயவர்த்

(6 ஆம் பக்கம் பார்க்க]

## தெற்கில் துக்கம்

கொழும்பு, ஆக. 10

ஸ்ரீலங்கா இராணுவத் தளபதிகள் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பிலும், தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நேற்றுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச அலுவலகக் கட்டடங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன.

டென்ஸில் கொப்பேகடுவ முன்னர் பணியாற்றிய வவுனியா, அனுராதபுரம் பகுதிகளில் வாகனங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. [உ-3]

**ஆளுக்கொரு மரம் நடு**
**ஆயுள் நீள உறுதி எடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிரிடப்படாத நிலங்கள் அரசு பொறுப்பேற்குமாம்!

கொழும்பு, ஆக. 10

பயிரிடப்படாத விளை நிலங்களை தற்காலிகமாகப் பொறுப்பேற்க காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு பொறுப்பேற்கப்படும் நிலங்கள் ஏனையவர்களைக் கொண்டு பயிரிடப்படும் என்றும் —

நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் — அறிவிக்கப்படுகின்றது. [இ-எ]


திருநெல்வேலி
முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில்
எழுந்தருளியிருக்கும்
துர்க்கையம்பாளுக்கு
நாளை செவ்வாய்க்கிழமை 11 — 08 — 1992
காலை 10-30 மணிக்கு
அஷ்டோத்திர சங்காபிஷேகமும்
பிற்பகல் 5-30 மணிக்கு
துர்க்கையம்பாள் வீதிவலம் வரும் காட்சியும்
நடைபெறும்.
(22107) — தேவஸ்தானம்.



யாழ். திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின்
முன்னாள் பொருளாளர்
அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம்
நினைவாக நடத்தப்படும்
உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள்

இடம்: குருநகர் விளையாட்டு மைதானம்
காலம்: 10—08—92 நேரம்: 3.00 மணி
1. திருநகர் பாரதி வி. க. எதிர் எழிலூர் வி. க.
2. குருநகர் பாடும்மீன் வி. க. எதிர் அரியாலை சன சமூக நிலையம் - 4.00 மணி
3. யுத்காசர்மல் வி. க எதிர் சென். மேரிஸ் வி. க - 5.00 மணி
12—08—92 - 4.00 மணி
1. றிங்கோ ஸ்ரார் வி. க. எதிர் புனித பதுவையர் வி. க.
2. பாடும்மீன் / அரியாலை எதிர் வைக்கிங்ஸ் / சென். அன்ரனீஸ் - 5.00 மணி
14—08—92 - 4.00 மணி
1. தொடர்மாடி வி. க. எதிர் கலைச்சுடர் வி. க.
2. ஜோன் கென்னடி வி. க. எதிர் அரியாலை வி. க. - 5.00 மணி
15—08—92 - 4.00 மணி
1. காந்திஜி வி. க. தீவகம் எதிர் றோயல் வி. க.
2. பாடும்மீன் வி. க. எதிர் பொற்பதி வி. க. - 5.00 மணி
விளையாட்டுக் குழு
— திருவள்ளுவர் சனசமூக நிலையம் —
(சி/3036)



மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்: 14 — 02 — 1949



அமலன் பதிப்பில்: 10 — 08 — 1989

அமரர் இ. கருணாகரன்

பேச்சொன்றும் பேசாது மூச்சடங்கி விட்டனையே மூத்தவனே கருணாகரா-நீர் மறைந்து மூன்றாண்டு கழிந்திட்டாலும்-எம் மூச்சிருக்கும் வரை நாம் உம்மை மறவோம்.

ஓம் சாந்தி.

உமது பிரிவால் துயருறும்,

அன்புப் பெற்றோர், சகோதரர், மனைவி, மைத்துனி, பெறாமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்,
வசந்தன் குடும்பத்தினர்.

செல்வா வீதி,
தொல்புரம் மேற்கு,
சுளிபுரம்.


# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 10

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் — 8 ஆம் திருவிழாவான இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் (மாலையில் — ராதிகா சுப்பிரமணியத்தின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலயமுன்றலில் (மாலையில்) — கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''தேவ சேனாபதி'' என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு — கந்த புராணப் படிப்பு, பிற்பகல் 3.00 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [ஒ-30]

## இன்று

கொழும்புத்துறை, ஆக. 10

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் சேவையாற்றி வருகின்ற சகல சாரணருக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறும். [ஒ-30]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 10

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை — ஆகஸ்ட் மாதத்தில் வீரமரணமடைந்த மாவீரர்களை நினைவுகூரும் அஞ்சலிக் கூட்டம் இன்று திங்கட்கிழமை இரவு 7-30 மணிக்கு சண்டிலிப்பாய் வட்டத்தில் — சண்டிலிப்பாய் நந்தன் விளையாட்டுக் கழகத்தில் — நடைபெறும். [ஒ]

## ஆப்கானில் மீண்டும் சண்டை

காபூல், ஆக. 10

ஆப்கனிஸ்தானில் முஜாஹுதீன் கெரில்லாக் குழுக்களிடையே மீண்டும் கடும் சண்டை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் காபூலில் சண்டை நடைபெற்று வருகின்றது. காபூலில் உள்ள ஜனாதிபதி மாளிகைக் கட்டடம் நேற்று ரொக்கட் தாக்குதலுக்குள்ளானது. 8 பாதுகாவலர்கள் அப்போது கொல்லப்பட்டனர்.

கடந்த சனி இடம்பெற்ற சண்டையில் 20 பொதுமக்கள் உயிரிழந்தனர். [ஒ-எ]

## மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 10

மட்டக்களப்பு - மூதூர் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி நடந்த படையினரின் தாக்குதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் ஆதரவாளரான புண்ணியம் பாலசிங்கம் (35 வயது — மட்டக்களப்பு) மரணமானார். [உ-3]

## மேலதிக நேர கொடுப்பனவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 10

வைத்தியசாலை சிற்றூழியர்களின் மேலதிக நேர ஊதியக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

72 மணித்தியால மேலதிக நேர வேலைக்கு 135 ரூபா மாத்திரமே இதுவரை வழங்கப்பட்டு வந்தது. தற்போது 76 மணித்தியாலங்கள் மேலதிக நேர வேலை செய்யும் ஊழியர்களுக்கு 425 ரூபா ஊதியம் வழங்கப்படவுள்ளது.

1-7-92 திகதியிடப்பட்ட 9/17/92 இலக்க சுற்று நிருபத் திற்கமைய இக் கொடுப்பனவு கடந்த ஜூலை மாதம் முதல் வழங்கப்படும். [உ-15]

# ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் இறுதி முடிவு இன்று தெரியும்

பார்சிலோனா, ஆக. 10

ஸ்பெயின் பார்சிலோனா நகரில் இடம்பெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகள் நேற்று இரவோடு முடிவுற இருந்தன.

ஒரு தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டியின் முடிவு நேற்று முடிவுற இருந்த வேளையில் சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு (முன்னாள் சோவியத்) தொடர்ந்தும் முன்னணியில் இருந்தது. இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே அமெரிக்காவும், ஜேர்மனியும் வகித்தன.

நேற்று அறிவிக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :-

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண். |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 45 | 38 | 28 |
| அமெரிக்கா | 37 | 34 | 38 |
| ஜேர்மனி | 33 | 21 | 27 |

# 84 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்: திருப்பி அனுப்பும் முடிவில் மாற்றம் எதுவும் இல்லை

கொழும்பு, ஆக. 8

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்கு அனுப்பப்படவேண்டிய 84 ஆயிரம் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளரையும் திருப்பி அனுப்புவது என்ற அரசாங்கக் கொள்கையில் எந்த வித மாற்றமும் இல்லை

பிரதமர் டி. பி. விஜேதுங்கா கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த 84 ஆயிரம் இந்திய வம்சாவளியினருக்கும் பிரசா உரிமை வழங்குவது தொடர்பாக அரசாங்கத்துக்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் இடையில் எவ்விதமான பேச்சுவார்த்தையும் இடம் பெறவில்லை என்றும் திரு. விஜேதுங்கா தெரிவித்தார்.

## 47 நபர்களை ஆணைக்குழு சந்தித்தது

கொழும்பு, ஆக. 10

காணாமற் போனவர்களைக் கண்டுபிடிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இதுவரையில் நடத்திய விசாரணைகளில் காணாமற் போனதாக தெரிவிக்கப்பட்ட 47 நபர்களைச் சந்தித்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1991 ஜனவரி 11ஆம் திகதியிலிருந்து காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இக் குழுவுக்கு 422 பேர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (த-10)

## தாண்டிக்குளம் பயணிகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 10

நேற்று முன்தினம் வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமில் வைத்து தமிழ் பயணிகள் பலர் ஸ்ரீலங்கா படையினரால் தாக்கப்பட்டதாக அறிய வருகிறது. இதனால் பயணிகள் பலர் தமது உடைமைகளை இழந்தனர்.

கடந்த புதன், வியாழக் கிழமைகளிலும் பயணிகள் படையினரால் தாக்கப்பட்டனர் என்றும்—

நகரில் உள்ள தமிழர்களும் படையினரால் அடிக்கடி தாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. [உ-3]

## சீக்கிய தலைவர் சுட்டுக் கொலை

ஆயிரம் பேரின் கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சீக்கிய தீவிரவாதத் தலைவர்களில் ஒருவரான சுக்தேவ் சிங் என்பவரை இந்தியப்படையினர் நேற்றுக் காலை சுட்டுக் கொன்றனர்.

பஞ்சாப் மாநிலத்தின் முக்கிய நகரம் ஒன்றில் இச் சம்பவம் இடம் பெற்றது.

## போரூட் நடவடிக்கை

வடமராட்சி, ஆக. 10

வல்லை வெளியில் பாதை ஓரங்களில் மூன்றுவகை மரங்கள் நாட்டுவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி போரூட் நிறுவனம் எடுத்து வருகிறது. மூன்று நிரைகளில் இம் மரங்கள் நாட்டப்படும்.

## 70 பேர் பலி

புதுடில்லி. ஆக. 10

மிஸோராம் மாநிலத்தில் நேற்று ஏற்பட்ட பாரிய மண்சரிவில் குறைந்தது 70 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

# 2ஆம் தர அதிபர் பதவிக்கு 25இல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக. 10

1985ஆம் ஆண்டு ஜனவரி முதல் திகதியிலும், அதற்கு முன்வரும் அதிபர் தரம் III பதவியில் நியமிக்கப்பட்ட அதிபர்கள் அதிபர் தரம் IIக்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

கல்விச் சேவைச் சபையின் பிரதிப் பணிப்பாளர் திரு. பி. எஸ். கமகே இத்தகவலை தம்மிடம் தெரிவித்ததாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கூறினார்.

தமிழ் அதிபர்கள் 21 பேர் அவ்வாறு பதவி உயர்வு பெறத் தகுதி பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள கல்விச் சேவைச் சபையின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட 21 அதிபர்களுக்கும் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டிருப்பதாகவும் —

அழைப்புக் கடிதங்கள் கிடைக்காவிட்டாலும் அவர்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய படிவத்தை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமைப் பணிமனையில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து, கோட்டக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் என்றும் திரு. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் அதிபர்களுக்கும் 01-01-92ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரக்கூடியதாக நியமனம் வழங்கப்படும்.

மேற்படி பதவி உயர்வு பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ள 21 பேரின் விபரத்தை—

இல. 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். [அ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ...
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



# பலாலி சிவில் விவகார குழுத் தலைவராக வவுனியா முன்னாள் அ. அதிபர் லோகேஸ்

கொழும்பு, ஆக. 10

யாழ். குடாநாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகப் பாதுகாப்புப் படையினர் ஆரம்பிக்கவிருக்கும் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் பலாலி இராணுவ முகாமில் ஏற்படுத்தப் படவுள்ள உத்தேச சிவில் விவகார இணைப்புக்குழுவின் தலைவராக வவுனியா முன்னாள் அரச அதிபரும், கனிப்பொருள் அமைச்சின் செயலாளருமான திரு. கே. வி. லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸா, திரு. லோகேஸ்வரனைக் கடந்த புதன்கிழமை அழைத்து, சிவில் விவகார இணைப்புக் குழு குறித்து பேசியதாகத் தெரிகிறது.

இராணுவ நடவடிக்கை இடம்பெறும் காலத்தில் கூட்டுப் படைத் தளபதி, முப்படைகளின் தளபதிகள், உயர் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் பலாலி இராணுவ முகாமில் தங்கியிருப்பார்கள் எனவும் —

அவர்கள் தினமும் காலையில் கூடி இராணுவ நடவடிக்கை குறித்து ஆராயும் கட்டத்துக்கு சிவில் விவகார இணைப்புக் குழுத் தலைவரும் அழைக்கப்படுவார் என்றும் அறிய தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-3)

## இல்ல விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி, ஆக. 10

மட்டுவில் பொன்னம்மான் வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கப்டன் திபன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும். (அ-31)

## முஸ்லிம் முன்னணியினர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### வட - கிழக்கு யுத்தத்தை நிறுத்தக் கோரிக்கை

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தக் கோரி முஸ்லிம் முற்போக்கு முன்னணியினர் கடந்த வெள்ளிக்கிழமை மருதானை பள்ளிவாசலுக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பள்ளி வாசலில் ஜும்மா தொழுகையை முடித்துக் கொண்ட பின் பள்ளிவாசலின் நுழைவாயிலின் அருகே நின்று சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

யுத்தத்தை நிறுத்து, இனவாதத்தை நிறுத்து, யுத்தத்தினால் எல்லா இனமக்களும் அழிந்து கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க எமது ஆதரவு அவர்களுக்குண்டு என்று அந்த சுலோகங்களில் எழுதப்பட்டிருந்தன.

இப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (த)

## வாரத்தில் 3நாட்கள் மட்டுமே இறைச்சி வியாபாரம்

குருநகர், ஆக. 10

யாழ் மாவட்டத்தில் இறைச்சி வியாபாரம் இனிமேல் புதன், சனி, ஞாயிறு ஆகிய 3 தினங்கள் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

கால்நடைகளை பெற்றுக் கொள்வதில் நிலவும் இடர்பாடுகளைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சமாசத்தின் கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. (த-51)

## சி. ஐ. டியினர் எனக்கூறி பணம், நகை கொள்ளை

### மன்னார் வாசிகளிடம் கைவரிசை

மன்னாரில் இருந்து கொழும்புக்கு வந்த பயிர்ச்செய்கை உத்தியோகத்தரிடமும், அவருடன் வந்த மூன்று உறவினர்களிடமும் இருந்து வான் ஒன்றில் வந்தவர்கள் 19 ஆயிரம் ரூபா பணத்தையும், 2 மோதிரங்களையும் அபகரித்துச் சென்றனர்.

கொழும்பு புறக்கோட்டை கதிரேசன் வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கதிரேசன் வீதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் முன்னால் வைத்து வான் ஒன்றில் வந்திறங்கிய மேற்படி கோஷ்டியினர் தங்களை சி. ஐ. டியினர் என்று கூறினர்.

விசாரணைக்காக பொலிஸ் அத்தியட்சகரிடம் அழைத்துச் செல்வதாகக் கூறி வானில் அவர்களை ஏற்றிச் சென்று பணத்தையும், நகையையும் கொள்ளையடித்த பின் மன்னார் வாசிகளை கொழும்பில் இறக்கி விட்டனராம். (த)

## தீ விபத்தில் முஸ்லிம் யுவதி மரணம்

கொழும்பு, ஆக. 10

புத்தளம் மதீனாபுர முகாமில் தங்கியிருந்த யாழ். சோனக தெருவைச் சேர்ந்த சித்தி பாயிஸா (வயது 21) என்ற முஸ்லிம் யுவதி தீ விபத்தொன்றில் இறந்ததாக அறிவிக்கப்படுகிறது.

சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தபோதே அவரது உடையில் தீப்பற்றிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## தாண்டிக்குளத்தில் உள்ள அகதிகள் முகாமில் தீ!

தமிழகத்தில் இருந்து நாடு திரும்பிய சுமார் 200 தமிழ் அகதிகள் வவுனியா — தாண்டிக்குளத்தில் தங்கி இருந்த அகதி முகாம் கொட்டில்கள் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு தீக்கிரையாகின;

இக்கொட்டில்கள் எவ்வாறு தீக்கிரையாகின என்பது சனிக்கிழமை வரை மர்மமாகவே இருந்து வருகின்றது.

இப்படிக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (த-எ)

யா/கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

பாடசாலை அபிவிருத்திச்சபை

பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்

★ ஆசிரியர்களுக்கான கூட்டம் முற்பகல் 9மணி
★ பெற்றோர்களுக்கான கூட்டம் முற்பகல் 10 மணி
★ பழைய மாணவர்களுக்கான கூட்டம் - முற்பகல் 11 மணி

காலம்: 12 — 08 — 1992 புதன்கிழமை

தயவு செய்து எல்லா ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மு. இராமலிங்கம்,
அதிபர்.
யா/கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.
[22099]

## திருமலை ஊர்காவற்றுறை கப்பற் சேவை?

கொழும்பு, ஆக. 10

திருகோணமலைக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்த அரசு தீர்மானித்துள்ளது — என கொழும்புபத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கென சீனாவிடமிருந்து புதிய பயணிகள் கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்படும் என்றும், பயணிகள் கப்பல் சேவை இம்மாத இறுதிக்குள் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

ECALOM மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம்.

புதிய A/L 94 பிரிவு

● பொருளியல் — திரு. உதயன்
★ கேள்விக் கோட்பாடு ★
செவ்வாய், வியாழன் 5 மணி

● கணக்கியல் — திரு: சௌந்தி
★ வியாபார இலாப நட்ட க/கு ★
செவ்வாய், வியாழன் 3 மணி

● வர்த்தகம் — திரு. சாம்ராஜ்
செவ்வாய் வியாழன் 4 மணி

● அளவையியல் — திரு. பிரபாகரன்
சனி, ஞாயிறு 3 மணி

ஆரம்பம்: 11-08-1992
(இ-3108)

## உடைமைகள் மீட்பு!

மட்டக்களப்பு, ஆக. 10

மூதூர் பகுதியில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் காணாமற்போன கொமாண்டோ பொலிஸார் ஒருவரின் அடையாள அட்டையும், ஆயுதங்களும் தற்போது கட்டைப் பறிச்சான் ஏரியில் கண்டெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கட்டைப்பறிச்சானில் 1990 ஜூன் மாதத்தில் காணாமல் போன 40 கொமாண்டோக்களில் இவரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

## ● உலகில் பெரிய பணக்காரர்!

டோக்கியோ, ஆக. 10

இவ்வாண்டில் உலகில் மிகப் பெரிய பணக்காரராக ஜப்பானைச் சேர்ந்த 88 வயதான டஸ்கிசிரோ மோரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆண்டு தோறும் உலகின் மிகப் பெரும் செல்வந்தர்களின் பட்டியலை வெளியிடும் "போர்ப்ஸ்" சஞ்சிகை திரு. மோரியை இரண்டாவது ஆண்டாக பெரும் பணக்காரராக தெரிவு செய்துள்ளது.

அவரது சொத்துகளின் பெறுமதி 1,300 கோடி டாலர் (57,200 கோடி ரூபா) என்று தெரிவிக்கப்பட்டது. இவர் ... (த-3)

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
Sep இல் நடைபெறவுள்ள
எழுதுவினைஞர் சேவை
போட்டிப் பரீட்சைக்குரிய
விசேட பயிற்சி வகுப்புகள்

2ஆவது பிரிவு
ஆரம்பம்: 15 - 08 - 1992
பி.ப. 2 மணி.

பாடநெறி:
(1) மொழிப் பயிற்சி (11) தகுதித்தேர்வு

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
★ கட்டணம் ரூபா 300/- (முழுப்பயிற்சிக்கும்)
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD,
JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

பற்றீஷன்
தொழிற் பயிற்சி நிறுவனம்
PATRICIAN INSTITUTES

அகில உலக கெயர் மரவேலை,
கட்டு வேலை

பயிற்சி நெறிகள்:
அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் (Care International) இணைந்து எம்மால் நடத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சித் தகைமை:
15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்.

கொடுப்பனவு:
ஸ்தாபனப் பயிற்சியின் போது (2 மாதம்) மாதம் 600/-வும், பயிலுனர் பயிற்சியின் போது (10 மாதம்) வேலைக்கு பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்: 15—08—1992 இற்கு முன்னர்

பதிவாளர்,
பற்றீஷன் தொழிற் பயிற்சி நிலையம்,
இல. 59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.
(இ-8035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு] [22043]

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: S. சிவகுமார், இல: 71/2, கோவில் வீதி, நல்லூர். (கைலாச பிள்ளையார் கோவிலுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இடையில் உள்ள ஒழுங்கையில்) [22106]

நல்லின மரக்கறி மற்றும் பழமரநாற்றுகள் விற்பனைக்கு உண்டு. சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்கான தற்காலிக விற்பனை நிலையம். நல்லை ஆதீனம் அருகில். சைவவித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி. [22100]

### கருட புராணம்

பெரிய எழுத்து ஸ்ரீ கருட புராண வசனம் படங்களுடன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-2989]

### O/L MATHS

தனியாகவோ, சிறு குழுவாகவோ பல வருட அனுபவமிக்க பயிற்றப்பட்ட ஆசிரியரினால் வீடுகளில் வந்து கணிதம் கற்பிக்கப்படும். திறமைச் சித்தி நிச்சயம். தொடர்பு: T. நாகேந்திரம், வசந்தம் புத்தகசாலை, இல: 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [2208]1

### திருமண சேவை

நல்லூர் ஒய்வூதியர் ஆரம்பித்த திருமண சேவைக்கு விண்ணப்பங்கள், குறிப்புகள் படங்களுடன் கிடைத்துள்ளன. பொருத்தமானவர்களுடன் மேலும் விவரங்களுக்காக தொடர்பு கொள்ளப்படும். விவரங்களுக்கு சுய விலாச முத்திரை உறையுடன் தொடர்பு கொள்ளவும். இல: 52, செம்மணி வீதி, நல்லூர். [22089]

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [5237]

## மஸ்கெலியா மக்கள் வங்கியில் பணம் மோசடி

மஸ்கெலியா மக்கள் வங்கிக்கிளையில் வைப்பில் இடப்பட்ட 7லட்சத்து 90 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அவ் வங்கியில் கடமையாற்றிய காசாளர் ஒருவர் தலை மறைவாகி உள்ளார்.

மஸ்கெலியா ப.நோ.கூ. சங்கத்தின் பெயரில் வைப்பில் இடப்பட்ட பணமே மோசடி செய்யப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் இப்பணம் வைப்பில் இடப்பட்டது என்றும்—

வங்கியின் பண வைப்புப் பற்றுச் சீட்டு வழங்கப்பட்ட போதிலும், பணம் வங்கிப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றும்— தெரிவிக்கப்படுகிறது. [இ]

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 26 — 12 — 1915



உதிர்வு: 10 — 08 — 1991

### அமரர் வீரகத்தி பொன்னம்பலம்

(ஒய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய கதிர்காமக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களை நினைவு கூரும்,
குடும்பத்தினர்.

'துர்க்கா திபம்',
கோப்பாய் வடக்கு. [22105]

## ஓராண்டின் நீங்காத நினைவலைகள்

தாயின் மடியில்: 23 — 07 — 1936



இறைவன் அடியில்: 24 — 07 — 1991

திருமதி
### இராசசிரோன்மணி இராசையா

திதி: திரயோதசி

''ஆசையுடன் ஈன்றெடுத்து
அறிவாளி யாக்கிய எம்
நேசமுள்ள அம்மாவே இராசசிரோன்மணியே!
பாசமதை மறந்து பரமனடி சேர்வதற்கு
வாசமலரே! எமை மறந்து நீர் சென்றதேனோ?

கணவன், பிள்ளைகள்.

சரசாலை மத்தி,
சாவகச்சேரி. [22085]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 — 10 — 1924

மறைவு: 10 — 08 — 1989



### சுப்பிரமணியம் குருநாதன்

(சட்டத்தரணி)

முதலாம் குறுக்குத்தெரு - யாழ்நகர்

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு என்றும் நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,
மனைவி, மக்கள்.

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [22087]

## G.C.E (O/L) கணிதம்

பகுதி 1க்கான வினாக்கள் அலகு ரீதியாகத் தயாரிக்கப்பட்டவை.

இரு மாதிரி வினாத்தாள் உட்பட மொத்தம் 400 வினாக்கள்.

ஆக்கியோன்:
### திரு. .த தயாளன்

விலை ரூபா 35 - 00.

நகரிலுள்ள புத்தகசாலைகளில் கிடைக்கும்: [22047]

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கமலாதேவி சுப்பிரமணியம்

(ஆசிரியை)

மலர்வு: 13—03—1956

உதிர்வு: 10—08—1985

அன்பின் சிகரமே! அருமை அம்மா! நீர் மறைந்து ஏழு ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் மறையவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

கணவன், மகன் மயூரன்.

கிறிஸ்தவ கல்லூரி முன்பு,
கோப்பாய். [22064]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும், நன்றி நவிலலும்

தோற்றம்: 12 — 04 — 1914



மறைவு: 11 — 07 — 1992

அமரர்
### அப்பச்சி எதிர்வீரசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர், பண்ணாகம்)

அமரர் அப்பச்சி எதிர்வீரசிங்கம் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்றைய தினம் (10-8-1992) திங்கட்கிழமை மு. பகல் 10-00 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறும். இன்றைய தினம் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவரை சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்திருந்த போது பூரண உதவி புரிந்த அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மற்றும் ஊழியர்களுக்கும், மரணச் சடங்கின் போது மலர் வளையங்கள் வைத்தும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், சிரமம் பாராது கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபக் கடிதங்கள் அனுப்பியவர்களுக்கும், சகல விதத்திலும் சரீர உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.
மருமகன்.

விசுவர்த்தனை கோவிலடி,
பண்ணாகம். [22096]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இனி எது மேலோங்கும்?

தமிழீழத்தில் கடந்த இருபத்தேழு மாதங்களாக நடநது வரும் யுத்தத்தில், நேற்று முன்தினம் ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள அராலியில் நடந்த தாக்குதல் மிகப் பென்னம் பெரியதாகும். விடுதலைப் புலிகள் நிகழ்த்திய சாதனைகளில் அது முதல் இடத்தைப் பெற்றுவிட்டது.

கடந்த ஒரு வருட காலமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வரும் தீவுப் பகுதியில், இராணுவம், கடற்படைகளைச் சேர்ந்த உயர் நிலை அதிகாரிகள் ஒன்பது பேரை கூண்டோடு பலி கொண்ட ஒரு தாக்குதலை நடத்தியிருப்பது விடுதலைப் புலிகளின் சக்தியை, மனப் பலத்தை, வீரத்தை, தியாகத்தை உலகத்துக்கு எடுத்தியம்பி இருக்கிறது.

இது ஸ்ரீலங்காப் படைகளுக்குப் பேரிடியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்கு மாறா அதிர்ச்சியையும, மனக்குழப்பத்தையும் தரும் என்பதில் வியப்பில்லை. இடி கேட்ட நாகம் போல அவர்கள் சுருண்டு போகாமல் இருக்க முடியாது.

யாழ்ப்பாணத்தின் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினால், லட்சக் கணக்கான தமிழ் மக்கள் உயிரிழக்க நேரிடும் என்பது இராணுவத்துக்குத் தெரியும். இறந்து போன கொப்பேகடுவ, விமலரத்ன, ஜயமஹா ஆகியோருக்கும் அடுத்த அறுவருக்கும் அது தெரிந்திருக்கும்.

ஆனால் அதனைப் பற்றிச் சிறிதும் கருத்தில் கொள்ளாமல், யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடித்ததாக — விடுதலைப் புலிகளை வென்று விட்டதாக — உலகத்துக்குக் காட்டி விட வேண்டும் என்ற மமதையும், செருக்கும் அவர்களை விட்டு வைக்கவில்லை.

லட்சக்கணக்கான மக்களைக் கொல்ல நேரிடுமே என்று அவர்கள் ஒருதுளியாவது சிந்தித்திருந்தால், காங்கேசன்துறையிலிருந்து காரை நகருக்கு வந்து அங்கிருந்து யாழ்ப்பாண நகரை எவ்வாறு தாக்கலாம் என்று திட்டம் போட்டிருப்பார்களா? அந்த இடத்தை நேரில் வந்து பார்க்க முனைந்திருப்பார்களா?

தமிழர்கள் நடத்துவது தர்ம யுத்தம். தங்களுடைய நியாய மான, முன்னர் அனுபவித்தும் இடையில் தட்டிப் பறிக்கப்பட்ட உரிமைகளை நிலை நாட்ட உறுதிகொண்டே அவர்கள் போராடுகிறார்கள். எவரது சொத்தையும் அல்லது உயிரையும் பறிக்க வேண்டும் என்பதற்காகவோ அடாத்தாகவும், அடக்குமுறையுடனும் பிறநாட்டாரின் உரிமைகளைப் பறித்து அவர்களை ஒடுக்கி வைத்திருக்கவேண்டும் என்பதற்காகவோ தமிழர் போர் புரியவில்லை.

ஸ்ரீலங்கா அரச படைகளின் ஒன்பது உயர்நிலை அதிகாரிகளை — ஒன்பது போர் வல்லுநர்களை — சாய்த்தமை தொண்ணூறாயிரம் துருப்புக்களை வீழ்த்தியதற்குச் சமன். யாழ்ப்பாணத்தின் மீது கடைசி அடியும். இறுதி அடியும் நடத்தத் திட்டமிட்டவர்களுக்குப் பேரிடி கொடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்களின் உரிமைப் போரை இராணுவ வழியால் நசுக்கிவிட முடியாது என்பதை இந்தக் கட்டத்திலாவது பிரேமதாச அரசு உணர்ந்து கொண்டால் அதற்கு விவேகம் இருப்பதாகக் கருதலாம்.

விவேகம், அகம்பாவம், அடக்குமுறை உணர்ச்சி, மேலாதிக்க வெறி இவற்றில் அரசிடம் எது மேலோங்கி நிற்கிறது என்பதை அதன் நாளைய செயற்பாடே எடுத்துக் காட்டும்.

---

இலங்கைத் தமிழ்

# அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு தீர்க்கமான முடிவு

கொழும்பு, ஆக. 10

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யுத்தம் நடைபெற்றாலும்— நாட்டின் ஏனைய பகுதிகளில் அமைதி நிலவுவதாலும்— தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் பாரபட்சம் காட்டாததாலும்—

சுவிஸ்சர்லாந்தில் தங்கி உள்ள 30 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் படிப்படியாகத் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

இவ்வாறு கொழும்பில் உள்ள சுவிஸ்சர்லாந்து தூதர் தீர்க்கமாகத் தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

சென்ற வருடம் மட்டும் சுமார் 7 ஆயிரத்து 300 இலங்கையர் சுவிஸ் சென்றனர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

''கடைசியாகச் சென்றவர்கள் முதலில் அனுப்பப்படுவார்கள். தொடர்ந்து அகதிகள் வருவதைத் தடுப்பதே முதல் நோக்கம். அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைக்கு அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தின் உதவி பெறப்படும். நஷ்டஈடு கொடுத்து பலவந்தமாகவேனும் 30 ஆயிரம் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவோம்.

''விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் நோக்கத்துடன் அகதிகளை நாம் திருப்பி அனுப்பவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தை நாம் அங்கீகரிக்கவில்லை. ஆகையால் அதனைத் தடைசெய்ய அவசியம் ஏற்படவில்லை.

''விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும்படி எவரும் எம்மைக் கேட்கவில்லை. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அலுவலகம் எதுவும் எமது நாட்டில் செயற்படவுமில்லை. ஆனால் அவர்கள் தமது இயக்கத்துக்குப் பணம் சேகரிக்கும் விஷயம் எமக்குத் தெரியும்.

''இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு நல்ல அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.''

இவ்வாறு கொழும்பில் உள்ள சுவிஸ் தூதர் தெரிவித்தார். (த-எ)

## பரீட்சை முடிவுகள் தபாலகங்களில் தேக்கம்

தென்மராட்சி, ஆக. 10

1990 ஆம் ஆண்டுக்குரிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகள் பல தென்மராட்சிப்பகுதியிலுள்ள தபால் அலுவலகங்களில் தேங்கிக் கிடப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பரீட்சார்த்திகளின் முகவரிகள் சரியாக இல்லாததால் இவை விநியோகம் செய்யப்படாமல் தபால் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. (த-3)

## ரொனி டீ மெல் செப்டம்பரில் நாடு திரும்புவாராம்!

கொழும்பு, ஆக. 10

முன்னாள் நிதி அமைச்சரும் தெவிநுவரை எம். பி. யுமான திரு. ரொனி டீ மெல் செப்டம்பர் மாத நடுப்பகுதியில் இலங்கை திரும்புகிறார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உயர் மட்ட முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திரு. ரொனி நாடு திரும்பியதும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தென் மாகாண அமைப்பாளராக இருந்து செயல்படுவார் என்றும்—

அக்கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவராக ரொனி டீ மெல்லை ஏற்றுக் கொள்வதற்கான மனோநிலை அக்கட்சியில் நிலவுவதாகவும் அந்த முக்கியஸ்தர் மேலும் தெரிவித்தார்.

திரு. ரொனி டீ மெல்லின் மனைவி திருமதி மல்லிகா டீ மெல் தற்போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மகளிர் அணி தலைவிகளில் ஒருவராக இருந்து வருகிறார். [த]

## சட்ட வைத்திய அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு!

கொழும்பு, ஆக. 10

தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் மகஸீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் கல்முனையைச் சேர்ந்த கோவிந்தன் கெங்காதரன் என்பவரை சட்ட வைத்திய அதிகாரி முன் ஆஜர் செய்து வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கும்படி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி வாலிபரின் தந்தை தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கல்முனை பொலீஸ் நிலையத்தை தாக்கி உயிர்ச்சேதம் ஏற்படுத்த முயன்றது — அரசு சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் தாக்கியது. அது பற்றிய தகவலை பொலீஸாருக்கு கொடுக்கத்தவறியது ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். [த]

### தொழிற்சங்க நடவடிக்கை

கணிசமான அளவு சம்பள உயர்வு கோரி அரசுக்கு நெருக்குதல் கொடுப்பதற்காக தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க பல்கலைக் கழக ஆசிரியர் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

குறைந்தது 60 சதவீத சம்பள உயர்வு வழங்கும்படி இச் சங்கம் கோரி வருகிறது.

## தனிநாடு ஒன்றை அமைக்க அரசு இடமளிக்காது

### ஜனாதிபதி பிரேமதாஸா சொல்கிறார்

கொழும்பு, ஆக. 10

நாட்டிற்குள் தனிநாடு ஒன்றை அமைக்க அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது. ஜனாதிபதி பிரேமதாஸா மொரட்டுவையில் கடந்த சனி மாலை நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அநீதிகளுக்கு நான் ஒரு போதும் தலை வணங்கப் போவதில்லை. பொதுவான புரிந்துணர்வின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதே அரசாங்கத்தின் குறிக்கோள் ஆகும் என்றும் ஜனாதிபதி சொன்னார்.

அரசின் அபிவிருத்தித் திட்டங்களை சீர்குலைக்கும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. அரசாங்கத்துடன் முன்னர் இருந்த சிலரும் இதில் அடங்குவார்கள். உயர் நீதிமன்றத்தின் முன்னால் பொய் கூறுவோர் என்று நிரூபிக்கப்பட்ட இவர்கள் தேசிய மட்டத்திலான தேர்தல்களில் நம்பிக்கை இழந்து இப்பொழுது போலிக் கையொப்பங்களைத் திரட்டுவதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். [த-எ]



உ

## நிபுணா வருக வருகவே!

வீரம் எங்கும் விளையாட,
வெற்றி கொட்டு முரசறைய,
வேகம் கொண்டு தமிழர்படை
விரைவாய் உரிமை வென்றாட

நேரம் இப்போ வந்ததையா!
நிந்தம் நித்தம் நல்லூரா!
நீயும் வாவா! துணையாக
நிபுணா வருக! வருகவே!!

- முருகனடியான்.

## 71 ஏழைக் குடும்பங்களுக்கு கிளிநொச்சிப் பகுதியில் கோழிக்குஞ்சு விநியோகம்

கிளிநொச்சி, ஆக.10

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனைவிழுந்தான் கிராமத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 71 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 20 கோழிக் குஞ்சுகள் வீதம் ஆயிரத்து 420ஒரு மாதக் குஞ்சுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் விநியோகிக்கப் பட்டுள்ளன.

வ்சந்தபுரம், வன்னேரிக் குளம் கிராமங்களுக்கு இடைப்பட்ட காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆனைவிழுந்தான் கிராமத்தில் றெட்பானா நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் பல குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. தற்போது, றெட்பானா உதவித் திட்டம் முழுமையாக வழங்கப்படாததினால், இங்குள்ள மக்கள் பெரும் பொருளாதார இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இம் மக்களுக்கான சுய தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்குமுகமாக, கோழிக் குஞ்சுகளை விநியோகம் செய்துள்ளது. மேலும், கோழிக் குஞ்சுகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கு ஏற்றவாறு கோழிக் குஞ்சுக்கான தீவனங்களையும், பராமரிப்புக் கூடுகளையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வழங்கி வருகிறது.

இத் திட்டத்தின் கீழ் கோழிக் குஞ்சுகளைப் பெற்றவர்கள் அவற்றை வளர்த்து இனவிருத்தி செய்ததன் பின்னர், அவர்களிடமிருந்து மீளப் பெறப்படும் 20 கோழிக் குஞ்சுகளும், மீண்டும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வேறு குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## வடக்கில் இயங்கிய கூட்டுறவு வங்கி அரசின் சூழ்ச்சியால் செயலிழந்தது

### திரை நீக்க வைபவத்தில் உரை

உரும்பராய், ஆக. 10

வடமாகாணத்தில் இயங்கி வந்த மாகாணக் கூட்டுறவு வங்கி, கூட்டுறவுச் சபை என். டி. ஏ. பி. சி. யூனியன் ஆகியவை சிங்கள அரசின் சூழ்ச்சியால் செயலிழந்தன. இதைத் தடுத்து நிறுத்தி, மீள இயங்க வைக்க அமரர் க. சி. பொன்னுத்துரை பெரிதும் முயன்றார். அவரின் கனவை நனவாக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் முன்னாள் சிரேஷ்ட [illegible] யாளர் அமரர் க. [illegible] னுத்துரையின் உருவப் படத் திரைநீக்க வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, இணைப்பாறிய அதிபரும் கூட்டுறவாளருமான திரு. க. இ. குமாரசாமி இவ்வாறு கூறினார்.

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவிற்கு சங்கத் தலைவர் திரு. வே. சின்னத்தம்பி தலைமை வகித்தார்.

அவர் மேலும் அங்கு பேசும் போது கூறியதாவது:

முன்பு கூட்டுறவு அமைப்பு [illegible] செய்ததால் வடமாகாண விவசாயியின் முதுகெலும்பு உடைக்கப்பட்டது. அவர்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டது. கூட்டுறவின் வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது. என். டி. ஏ. பி. ஸி. யூனியன் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. மாகாண கூட்டுறவு வங்கியை செயற்பட வைக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலமே எமது பொருளாதாரத்தை கட்டி எழுப்ப முடியும் என்றார்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு சி. ஜெயபாலன், யாழ். பிராந்திய கூட்டுறவு கல்லூரி அதிபர் திரு. ந. குமாரசபாபதி உட்பட பலர் உரையாற்றினர். [த-154]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொப்பேகடுவ உட்பட

# உயிரிழந்த படையினரின் இறுதிக் கிரியைகள் இன்று

கொழும்பு, ஆக. 10

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் முழு இராணுவ மரியாதையுடன் இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

மேஜர் அல்விஸ், லெப்டினன்ட் லங்காதிலக ஆகியோரின் இறுதிச் சடங்குகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு முழு இராணுவ மரியாதையுடன் கனத்தையில் இடம்பெறும்.

லெப்டினன்ட் கேர்ணல் ஆரியரத்னாவின் இறுதிச் சடங்குகள் கொஹுவல மயானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கும், லெப்டினன்ட் விஜயபுரவின் இறுதிச் சடங்குகள் கட்டுவவாவில் உள்ள குடும்ப மயானத்தில் இன்று காலை 10.30 மணிக்கும்—

லெப்டினன்ட் கேர்ணல் பலிப்பஹானவின் இறுதிச் சடங்குகள் இன்று குருநாகலிலும், லெப்டினன்ட் கேர்ணல் ஸ்டீபனின் இறுதிச் சடங்குகள் இன்று கண்டியிலும்—

சகல இராணுவ மரியாதைகளுடன் நடத்தப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

இதேசமயம்—

வடபிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தினாவின் இறுதிச் சடங்குகள் நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. [ஒ-எ]

# மரணச் செய்தி கேட்டதும் தளர்ந்து போன பிரதமர்!

"உலகில் சொற்ப காலமே வாழப் போகும் நாம் எமக்கிடையில் — ஒருவருடன் ஒருவர்—ஏன் சண்டையிட வேண்டும்? ஒருவரில் ஒருவர் ஏன் பிழை காணவேண்டும்?

— இப்படி தழுதழுத்த குரலில் துயரத்துடன் கேட்டார் பிரதமர் டி. பி. விஜேதுங்க.

ஸ்ரீலங்காப் படைத் தளபதிகள் கண்ணிவெடியில் கொலையுண்ட சம்பவம் குறித்து அவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டபோதே அவர் இவ்வாறு துயரத்துடன் கேட்டாராம்.

கொழும்பில் ஆஸ்பத்திரி திறப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டிருந்த பிரதமரிடம் தளபதிகள் உயிரிழந்த செய்தி உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு துணை அமைச்சராகவும் பொறுப்பு வகிக்கும் பிரதமர் விஜேதுங்க தமது தளபதிகள் உயிரிழந்த செய்தி கேட்டதும் மேற்கண்டவாறு கவலையுடன் கூறினார் என்று அரச சார்பு ஆங்கில வார இதழ் நேற்று செய்தி வெளியிட்டது. [உ-3]

# படை அதிகாரிகளுக்கு பிரதமர் நேற்று அஞ்சலி

கொழும்பு. ஆக. 10

ஊர்காவற்றுறை கண்ணிவெடித்தாக்குதலில் பலியான படை உயரதிகாரிகளுக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பிரதமமந்திரியுமான டி. பி. விஜேதுங்கா நேற்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்.

அவர் உயிரிழந்த படையினரின் இல்லங்களுக்குச் சென்று குடும்பத்தவர்களிடம் தமது துயரைத் தெரிவித்துக் கொண்டார்.

பிரிகேடியர் விஜய விமலரத்தினாவின் பூதவுடல் கடவத்தையில் உள்ள அவரது இல்லத்திலும், லெப்டினன்ட் லங்காதிலகவின் பூதவுடல் தெமட்டகொடையில் உள்ள அவரது இல்லத்திலும் மேஜர் அல்விஸின் பூதவுடல் ராஜகிரியாவிலும் லெப்டினன்ட் கேர்ணல் ஆரியரத்தினாவின் பூதவுடல் மிரிஹானையில் உள்ள அவரது இல்லத்திலும் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தன.

பிரதமர் பின்னர், ஜயரத்ன இறுதிச் சடங்கு நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்த கடற்படைக் கொமடோர் ஜாமஹாவின் பூதவுடலுக்கு தமது இறுதி அஞ்சலியை நேரில் சென்று செலுத்தினார். [ஒ-எ]

# ஒரு நாள் துக்க தினத்துக்கு சிறிமாவோ கோரிக்கை

இராணுவத் தளபதிகளின் மறைவையொட்டி ஒரு நாளைத் தேசிய துக்க தினமாக பிரகடனம் செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

வீடுகள்தோறும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

பிரிகேடியர் விஜய விமலரத்ன மற்றும் படைத்தளபதிகளின் பூதவுடல்களுக்குத் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

அனுரா பண்டாரநாயக்கா உட்பட எதிர்க்கட்சிகளின் முக்கியதலைவர்களும் தளபதிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். [உ-ஒ-எ-3]

# படைத்தளபதிகள் இல்லாத குறையை நினைத்துக் கூடப் பார்க்கமுடியவில்லை

## இராணுவ அதிகாரி ஒருவர் ஆதங்கம்

கொழும்பு, ஆக. 10

கொப்பேகடுவ மற்றும் விஜய விமலரத்னா ஆகியோருக்குப் பதிலாக புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டாலும், மிகவும் பயிற்சி பெற்ற இத்தளபதிகள் இல்லாத குறையை தம்மால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

— இப்படி இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்த யுத்தத்தில் இராணுவ உயர் அதிகாரிகள் உயிரிழந்திருப்பது இராணுவத்தினரை மட்டுமல்ல, சிங்கள மக்களின் மனத்திடத்தையும் இழக்கச் செய்துள்ளது என்று கொழும்புப் பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்தன. [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 10

வளலாய்ப்பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையில் நடந்த மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்க போராளியான லெப்டினன்ட் ஆனந்குமார் அல்லது சாள்ஸ் [பாலசுப்பிரமணியம் தெய்வேந்திரன்—சித்தன்கேணி] வீரமரணமடைந்தார். [உ-3]

## படை அதிகாரிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவில்லை.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் சர்வ கட்சி மாநாடும் இப்போது செயற்பட்டு வருகின்றன. இந்த முயற்சியின் மூலம் பொதுவாகக் காணப்படும் இணக்கத் தீர்வை நடைமுறைப்படுத்துவது அரசின் கடமையாகும்.

இந்த நிலையில் இப்பிரச்சினையை வைத்து லாபம் சுட்ட எவரும் முற்படக் கூடாது.

"வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் அரசுக்கு ஆண்டுதோறும் இரண்டாயிரம் கோடி ரூபா செலவாகிறது. இப்பணத்தை எம்மால் மீதப்படுத்த முடியுமாயின் அதனை நாட்டில் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு நாம் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

ஆகவே வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தேசிய ரீதியாக அரசியல் தீர்வு காண வேண்டியது அவசியமாகின்றது. — என்றார்.

## பெரும் தாக்குத...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலைமைகளை பார்வையிடும் தேவை அவர்களுக்கு இதனால்தான் ஏற்பட்டது என்றும் — ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் தாக்குதலுக்கான திட்டங்களைத் தீட்டிய படை உயர் அதிகாரிகள் ஒட்டுமொத்தமாகக் கொல்லப்பட்டிருப்பதால் யாழ்ப்பாணம் மீதான உத்தேச தாக்குதலை இராணுவம் தாமதப்படுத்தக் கூடும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் கொப்பேகடுவ வடிவமைத்த ராணுவ உத்தியின் படி விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்கள் விரைவில் தொடங்கப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன. [உ-எ]

## அதிகாரியும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையின் படி, இப் படுகொலைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட 150 பேருக்கு 55 லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இவர்களில் 130 பேர் ஐயாயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை நட்டஈடாகப் பெற்றனர்.

எஞ்சிய 20 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது

இந்த இருபது பேரும் இந்த நட்டஈட்டை அடுத்த 5 ஆண்டுகளுக்கு முழுவதுமாகப் பெற முடியாது. அவர்களின் பேரில் அப்பணம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது 20 பேரும் இந்த வைப்புப்பணத்தின் பேரால் கிடைக்கும் வட்டிப்பணத்தை மாதா மாதம் பெற்றுக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது

இன்னும் 35 பேருக்கும் விரைவில் நட்டஈடு வழங்கப்படவுள்ளது [உ 3]

## கொப்பே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துனா ஆகியோர் இறந்தவர்களின் இடங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் உடனடியாக வடபகுதிக்குச் சென்றனர் எனவும் கொழும்பில் அறிவிக்கப்பட்டது. [உ-எ]

# விமானங்கள் நேற்று அடிக்கடி பறந்தன

யாழ். குடாநாட்டு வான் பிராந்தியத்தில் நேற்று முழு நாளும் விமானங்கள் இரைச்சலுடன் பறந்தபடி இருந்தன.

நேற்றிரவும் கூட விமானங்கள் அடிக்கடி சென்ற வண்ணம் இருந்தன.

ஆனால் குடாநாட்டுக்குள் விமானத் தாக்குதல்கள் ஏதும் இடம்பெற்றதாக எமது அலுவலகத்துக்கு நேற்றிரவு வரை செய்திகள் எவையும் கிடைக்கவில்லை.

## லெப்டினன்ட்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

கண்ணிவெடியில் பலியான ஏனைய படை அதிகாரிகளுக்கும் மரணத்துக்கு பிந்திய தாக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் ஐயாத்துரை

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்தவரும், ஓய்வுபெற்ற வனபரிபாலன திணைக்கள உத்தியோகத்தரும், நல்லூர் மார்க்கட் "சுகந்தி மில்" உரிமையாளருமான சோமசுந்தரம் ஐயாத்துரை அவர்கள் 1992 - 08 - 09 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (படவரைஞர், உரிமையாளர் - துவாரகா மில்ஸ் நல்லூர் மார்க்கட், யாழ்ப்பாணம்], சுமதி, பிரபாகரன் (கனடா), சுகிர்தா [அவுஸதிரேலியா), சுகந்தி (லண்டன்], சுமணா, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகதாஸ் (நில அளவையாளர், உரிமையாளர் - சாயி கிறைண்டிங் மில், இருபாலை), இந்திராணி, நித்தியானந்தன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஸ்ரீகாந்தன் [றேடியோ ஒபிசர், லண்டன்], வதனி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபல வர்த்தகர் சோமசுந்தரம், காலஞ்சென்ற தங்கம்மாவின் புத்திரனும், மீனாட்சி, பொன்னுத்துரை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பண்டிதர் இராசையா, காலஞ்சென்ற வைத்தியர் இராசையா, இராசம்மா, மகாதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஜிதா, மகிந்தா, டிலானி, சஞ்சீவ், துவாரகா, மயூரன், வாணி, கார்த்திக், உஷானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10 - 08 - 1992] திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எஸ். சண்முகதாஸ்.
[மருமகன்]

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[22109]

## அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை

[இளைப்பாறிய ஆசிரியர்]

கொழும்புத்துறை வளன்புரத்தை வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியர்] அவர்கள் 9-8-92 நேற்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற றோசம்மாவின் அன்புக் கணவரும், சறோஜா நீற்றஸ் [உப அதிபர், நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்], S. W. மரியதாஸ் [ஆசிரியர் யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்], S. W. விமலதாஸ் [போமன், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காலி], மன்றேசா இம்மனுவல் [ஆசிரியை, மாத்தளை கன்னியர் மடம்], மல்லிகா [இளைப்பாறிய ஆசிரியை], A. L. சுவாம்பிள்ளை [மக்கள் வங்கி, திருகோணமலை], S. P. அமலதாஸ் [நோர்வே] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், S. W. நீற்றஸ் [அதிபர், பாரதிபாஷா வித்தியாலயம்], மரியமலர், ஜோஜினா, விமலதாஸ் [உப அதிபர், யா/திருக்குடும்ப கன்னியர் மடம் ம. வி ], A இம்மனுவல் (சமூக சேவை அலுவலர் கேகாலை], சாந்தி, ஷாமினி [நோர்வே] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11-8-92 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
S. W. மரியதாஸ்
[மகன்]

1, சென் ஜோசவ்ஸ் வீதி,
வளன்புரம்,
கொழும்புத்துறை.

[22112]

## நாகரத்தினம் சரஸ்வதி

நாகரத்தினம் சரஸ்வதி நேற்று முன்தினம் கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஏழாலை மத்தியைச் சேர்ந்த நா. நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், நா. சண்முகலிங்கம் [சட்டம்பியார், 30ஸ்ரீ 5434 மினிபஸ் உரிமையாளர்], திருமதி ச அற்புதமலர், திருமதி இ. அம்பிகாராணி, திருமதி தே ஸ்ரீமகாராணி [கனடா], நா. தயாளகுமார், நா. கண்ணகி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
நா. சண்முகலிங்கம்.
[சட்டம்பி, மகன்]

ஏழாலை மத்தி,
ஏழாலை.

(22113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org